## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – 2012–2013–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – பெரம்பலூர், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, கடலூர் ஆகிய 8 மிகவும் பின்தங்கிய மாவட்டங்களுக்கு கூடுதலாக விலையில்லா தையல் இயந்திரங்கள் – வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை

அரசாணை (2டி) எண்:27 நாள்:14.08.2012

படிக்கப்பட்டவை:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.அ3/1377/2012, நாள் 11.05.2012.

*****

ஆணை:

தமிழ்நாட்டில் வாழும் கல்வி மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்களின் பொருளாதார மேம்பாட்டினை உயர்த்தும் வகையில், 2001–2002–ஆம் ஆண்டு முதல் இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் துவங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுவருகிறது.

2. 10.05.2012 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற இத்துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, "பெரம்பலூர், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, கடலூர் ஆகிய 8 மிகவும் பின்தங்கிய மாவட்டங்களுக்கு கூடுதலாக 1600 விலையில்லா தையல் இயந்திரங்கள் ரூ.57.60 இலட்சம் செலவில் வழங்கப்படும்" என்ற அறிவிப்பினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள்.

3.மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய மாவட்டங்களாக கண்டறியப்பட்ட பெரம்பலூர், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் கடலூர் ஆகிய 8 மாவட்டங்களுக்கு கூடுதலாக 1600 விலையில்லா தையல் இயந்திரங்களை ஒரு தையல் இயந்திரம் ரூ.3600/– வீதம் ரூ.57.60 இலட்சம் செலவில் (பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.34.56 இலட்சம் + மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.23.04 இலட்சம்) வாங்கி வழங்கிட ஆணைகள் வழங்குமாறும், மேலும், இத்திட்டத்தினை 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த சட்டத்தின்படியும், 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த விதிகளின்படியும் செயல்படுத்திடவும், ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.57.60 இலட்சத்திற்குள்

எத்தனை தையல் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய இயலுமோ அத்தனை தையல் இயந்திரங்கள் கொள்முதல் செய்து கொள்ள அனுமதித்தும் ஆணைகள் வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4.மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய மாவட்டங்களான பெரம்பலூர், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, கடலூர் ஆகிய 8 மாவட்டங்களுக்கு கூடுதலாக சுமார் 1600 தையல் இயந்திரங்களை, ஒரு தையல் இயந்திரம் ரூ.3,600/– வீதம் வாங்கி வழங்க ரூ.57,60,000/– (ரூபாய் ஐப்பத்து ஏழு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) (பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ரூ.34,56,000/– + மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ரூ.23,04,000/–) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5.மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

<u>பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கணக்குத் தலைப்பு ரூ.34.56 இலட்சம்</u>

> “2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 102 – பொருளாதார முன்னேற்றம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II – மாநிலத் திட்டம் – KD – பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குத் தையல் இயந்திரங்களை இலவசமாக வழங்குதல் – 19 – இயந்திரமும் சாதனமும் – 01 – வாங்குதல்”. (த.தொ.கு 2225–03–102–KD–1910)

<u>மிகப்பிபிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கணக்குத் தலைப்பு ரூ.23.04 இலட்சம்</u>

> “2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –102 – பொருளாதார முன்னேற்றம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II – மாநிலத் திட்டம் – KE – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியோருக்கு இலவசமாக தையல் இயந்திரங்கள் வழங்குதல் – 19 – இயந்திரமும் சாதனமும் – 01 – வாங்குதல்” (த.தொ.கு 2225–03–102–KE–1918)

6.மேலே பத்தி–4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத் தொகை 2012–2013–ம் ஆண்டில் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் சேர்க்கப்படும். 2012–2013–ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. 2012–2013–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்திற்கான இச்செலவினத்தைச் சேர்த்து முன்மொழிவுகள் அனுப்புமாறும், இச்செலவினத்தை இறுதி துணை மதிப்பீட்டில் சேர்த்திட உரிய விளக்கக் குறிப்பினையும் அனுப்புமாறும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7.மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் தையல் இயந்திரங்களை 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த விதிகளில் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி கொள்முதல் செய்திடவும், ஒப்பந்த புள்ளியினை முடிவு செய்தவுடன் மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் கொள்முதல் செய்ய இயன்ற அதிகபட்ச அளவு தையல் இயந்திரங்களை கொள்முதல் செய்திட அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை உடன் அரசுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்குமாறும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8.இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.40196/பி,மிபி/2012, நாள் 13.07.2012–ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.685 ((அறுநூற்று எண்பத்தைந்து)

(ஆளுநரின் ஆணைப்படி)

தங்க கலியபெருமாள்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை–5.
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை–5
மாநில கணக்காயர், சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
மாநில கணக்காயர், (துணிக்கை–I) சென்னை–18.
மாநில கணக்காயர், (துணிக்கை–I) சென்னை–18. (பெயரில்)
மாநில கணக்காயர், (துணிக்கை–II) சென்னை–18.
மாநில கணக்காயர், (துணிக்கை–II) சென்னை–18. (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு), சென்னை–8.

நகல்
முதலமைச்சரின் செயலர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நலத்துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்( பிமிபி/(வ.செ.பொது-I/ வ.செ.பொது– II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு /உபரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்